பேரூராட்சிகள் நிர்வாகம் – 2014–15 ஆண்டிற்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்க மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி தலைப்பின் கீழ் வித்தியாச தொகை விடுவித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ–2) துறை

அரசாணை ( ப ) எண். 225 நாள். 26.03.2015.

திருவள்ளுவர் ஆண்டு –2046,

ஜய, பங்குனி 12,

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (ப) எண்.108, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை நாள்.19.02.2015

2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண் 8194/2014/உ4நாள்.10.03.2015.

* * * * *

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், 2014–2015–ம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புநிதியின் கீழ் பின்வரும் பணிகளை பேரூராட்சிகளில் மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது .

| வ. எண். | திட்டம் | 2014–15 வரவு செலவு மதிப்பீட்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை | விடுவிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி | ரூ.85,38,46,000 | ரூ.62,11,63,000 |
| 2 | இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி | ரூ.34,24,61,000 | ரூ.26,62,13,000 |
| | மொத்தம் | ரூ.119,63,07,000 | ரூ.88,73,76,000 |

உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழான பணிகள்

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட பணிகள் (Committed works) | | | |
| 1. | 2014–15 ஆம் ஆண்டில் திறந்தவெளியில் மலம் கழித்தலை தடுக்கும் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொண்டது (25 சதவீதம் நிதி ஒதுக்கீடு) | 183 | 565.00 | 565.00 |
| | புதிய பணிகள் | | | |
| 2. | குடிநீர் திட்டம் | 74 | 2005.05 | 1865.46 |
| 3. | சாலைப்பணிகள் | 79 | 2735.50 | 2446.10 |
| 4. | மழைநீர் வடிகால் மற்றும் கல்வெர்ட் | 41 | 1356.50 | 1272.00 |
| 5. | அலுவலகக் கட்டிடம் (அறிவிப்பு பணிகள் உட்பட) | 19 | 939.00 | 883.00 |
| 6. | சமுதாயக் கூடம் (அறிவிப்பு பணிகள் உட்பட) | 8 | 392.00 | 392.00 |
| 7. | பேருந்து நிலையம் மேம்பாடு | 7 | 1034.90 | 1004.90 |
| 8. | வாரச்சந்தை | 1 | 45.00 | 35.00 |
| 9. | நவீன எரிவாயு தகனமேடை | 1 | 100.00 | 75.00 |
| | மொத்தம் | 230 | 8607.95 | 7973.46 |
| | பெருமொத்தம் | 413 | 9172.95 | 8538.46 |

இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழான பணிகள்

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில் | நிதி ஒதுக்கீடு (ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கல் திட்டம் | 36 | 1005.00 | 950.00 |
| 2. | சாலை பணிகள் | 51 | 1858.11 | 1677.61 |
| 3. | மழைநீர் வடிகால் மற்றும் கல்வெர்ட் | 16 | 540.50 | 504.00 |
| 4. | அலுவலகக் கட்டிடம் | 2 | 35.00 | 35.00 |
| 5. | சமுதாயக் கூடம் | 1 | 25.00 | 25.00 |
| 6. | பேருந்து நிலைய மேம்பாடு | 5 | 233.00 | 233.00 |
| | மொத்தம் | 111 | 3696.61 | 3424.61 |

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர், அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள பொதுக்குழுவில் (Common Committee) 2014–15–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.119,63,07,000/–க்கு பணிகள் தேர்வு செய்யப்பட்டு 05.12.2014–ல் ஒப்புதல்

பெறப்பட்டுள்ளது . எனவே 2014–15–ஆம் ஆண்டு உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட தொகை ரூ.88,73,76,000/– போக மீதமுள்ள வித்தியாச தொகை முறையே ரூ.23,26,83,000/– மற்றும் ரூ.7,62,48,000/– என மொத்தம் ரூ.30,89,31,000/–னை விடுவிக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்படி பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து 2014–2015–ம் ஆண்டில், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புநிதியின் கீழ் ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட தொகைரூ.88,73,76,000/–போக, மீதமுள்ள வித்தியாச தொகை உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.23,26,83,000/– (ரூபாய் இருபத்திமூன்று கோடியே இருபத்தாறு இலட்சத்து எண்பத்தி மூன்றாயிரம் மட்டும்) மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி தலைப்பின் கீழ் ரூ.7,62,48,000/– (ரூபாய் ஏழு கோடியே அறுபத்திரண்டு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரம் மட்டும்) 05.12.2014–ல் நடைபெற்ற பொதுக்குழுவில் (Common Committee) ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, நிதி விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேற்காணும் தொகையினை பெற்று வழங்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி மற்றும் அதிகாரம் அளித்து அரசு மேலும் ஆணையிடுகிறது.

5. மேற்படி செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்:-

<u>உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி தொகை ரூ.23,26,83,000</u>

> **“3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் – 193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி – I திட்டத்தில் சேராதது – AC அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை 09 உதவித் தொகை 02 மூலதன சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை”**
>
> **(DPC.3604 00 193 AC 0923)**

<u>இயக்க மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி தொகை ரூ.7,62,48,000/</u>

> **“3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்–193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி–I திட்டத்தில் சேராதது – AD இயக்க மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை–09 உதவித்தொகை – 02 மூலதன சொத்து உருவாக்குவதற்கான உதவித் தொகை**
>
> **(DPC 3604-00-193-AD-0921)”**

6. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட வித்தியாசத் தொகையினை பெற்று தமிழ்நாடு அடிப்படை வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கும் நிதியின் (PD A/c No.01G03099750BQ) பொது வைப்புக் கணக்கில் வரவு வைத்திடவும் மேலும், இந்நிதியினைக் கையாண்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை

ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை ஆகியவற்றைப் பொதுக்குழுவின் முடிவிற்கேற்ப விடுவிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

7.இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 18/DS(PW)/2012 நாள் 26.03.2015–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. பணீந்திர ரெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை –108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை –1.
மாநில கணக்காயர், சென்னை –9/18.

நகல்
முதன்மைச் செயலரின் முதன்மைத் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை –108.
நிதி (ந.நி (ம) கு.வ./நிகு–IV / வழிவகை மற்றும் கடன்கள் ) துறை,சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2 ) துறை, சென்னை – 9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

26/3/2015
பிரிவு அலுவலர்
26/03/15